# பதவிகள் - வெற்றிடம்

## புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு

*கலாசார அலுவல்கள் திணைக்களம்*

## ஆலோசகர் (நடனம்/இசை) பதவிக்காக (ஒப்பந்த அடிப்படையில்) ஆட்சேர்த்தல்

*கலாசார அலுவல்கள் திணைக்களத்தில் காணப்படும் கீழ்வரும் பதவி வெற்றிடங்களுக்காக ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்காக தகைமைகள் உள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.*

| | பதவி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| i. | ஆலோசகர் (நடனம்) | 01 |
| ii. | ஆலோசகர் (இசை) | 01 |

*இந்த ஒப்பந்தத்தின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஏற்ப A4 அளவினையுடைய தாளில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை 2021.09.10 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம், 08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்லை" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "ஆலோசகர் (நடனம்/இசை)" என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். அன்றைய தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும். இந்த அறிவித்தலை www.culturaldept.gov.lk என்ற வலைத்தளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும்.*

02. **சேவையை வலுவூட்டுதல் மற்றும் சேவை நிபந்தனைகள்:**

I. ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படுவதோடு ஒரு வருட ஒப்பந்த காலத்திற்கு நியமிக்கப்படுவர்;
II. சம்பளம் : ரூ. 35,000.00 மாதாந்தக் கொடுப்பனவு வழங்கப்படும்.

03. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள்:**
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழமொன்றில் அழகியற்கலை பட்டமொன்றினைப் பெற்றிருத்தல்

அல்லது

தேசிய நடனம்/இசைக்கான இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் அல்லது பாத்கண்டே அறிவியல் பீடத்தின் விசாரத பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்

II. **தொழிற் தகைமைகள்:** பொருத்தமற்றது.
(செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் தொழிற் தகைமைகள் மேலதிக தகைமைளாகக் கருதப்படும்)

III. **அனுபவம்:** விசேட தகைமைகளாகக் கருதப்படும்.
(எழுத்து மூலமாக உறுதிப்படுத்தக்கூடிய 10 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்திற்கு செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்படும்.)

IV. **உடற் தகைமைகள்:**

i. சகல விண்ணப்பதாரர்களும் பதவியில் கடமை மேற்கொள்வதற்கும், நாடளாவிய ரீதியில் எந்த பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடிய உடல் உள ஆரோக்கியத்துடன் இருத்தல் வேண்டும்;
ii. உயரம் 5 அடி 3 அங்குலத்திற்குக் குறையாது இருத்தல்.

V. **ஏனைய தகைமைகள் :**

i. சகல விண்ணப்பதாரர்களும் சிறந்த பண்புகளையும் உடல் ஆரோக்கியத்தையும் கொண்டிருக்க வேண்டும்.
ii. பதவிக்கு ஆட்சேர்த்தலுக்காக பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் தொடர்பாக விண்ணப்பங்கள் கோரப்படும் அறிவித்தலில்/ வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு குறித்த தகைமைகள் யாவும் பூர்த்தி செய்திருக்கப்பட வேண்டும்.

04. **வயதெல்லை :** விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்குக் குறையாதவாறும் 60 வயதுக்கு மேற்படாதவாறும் இருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்த்தல் முறை :**

- செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுக்கமைய ஆட்சேர்க்கப்படும்.

செயன்முறை மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சை

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான விடயங்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | தெரிவு செய்வதற்காக கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள்<br>* நடனம்/இசை விடயம் தொடர்பான பட்டப்பின் படிப்பு - 10 புள்ளிகள்<br>* பட்டத்திற்கு மேலதிகமாக நடனம்/இசை விடயம் தொடர்பான கல்வித் தகைமைகளைப் பெற்றிருத்தல் - 05 புள்ளிகள் | 15 | பொருத்தமற்றது |
| 2. குறித்த துறையில் பெற்றுள்ள அனுபவம்<br>* 15 வருடங்களுக்கு மேல் - 25 புள்ளிகள்<br>* 10 - 15 வருடங்கள் வரை - 20 புள்ளிகள்<br>* 10 வருடங்கள் - 15 புள்ளிகள் | 25 | |
| 3. தொழிற் தகைமைகள்<br>* தேசிய மட்டத்தில் சுய நடன/ இசை ஆக்கங்களை முன்வைத்திருத்தல் - 05 புள்ளிகள்<br>* சர்வதேச மட்டத்தில் சுய நடன/ இசை ஆக்கங்களை முன்வைத்திருத்தல் - 05 புள்ளிகள்<br>* பரம்பரை நடன/ இசை கலைஞராக இருத்தல் - 05 புள்ளிகள்<br>* நடன/இசை பேராசிரியராக அனுபவம்- 10 புள்ளிகள் (05 வருடங்களுக்கு மேலதிகமான ஒவ்வொரு வருடத்திற்கும் 01 புள்ளி வீதம்)<br>* ஆக்க வடிவமைப்பு அனுபவம் - 10 புள்ளிகள் (வருடமொன்றுக்கு 01 புள்ளி வீதம்) | 35 | |
| 4. மொழித்திறன்<br>* அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனமொன்றில் ஆங்கில மொழி தொடர்பான முழு நேர டிப்ளோமா பாடநெறியை பின்பற்றியிருத்தல் | 15 | |
| 5. நேர்முகப் பரீட்சையில் வெளிப்படுத்தும் திறமைகள் | 10 | |
| மொத்தம் | 100 | |

06. **விண்ணப்பதாரிகளின் அடையாளம்.**- விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் தொடர்பான விபரங்களை பிழையின்றி உட்படுத்த வேண்டியதுடன் தகுதி மதிப்பீட்டு நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்படுவது சகல விதத்திலும் முழுமையான விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமேயாகும்.

நேர்முகப் பரீட்சையின் சகல சான்றிதழ்களினதும் மூலப் பிரதியுடன் முறையான பிரகாரம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தனது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் அடையாளப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்:

1. ஆட்களைப் பதிவுசெய்யும் ஆணையாளரால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;
2. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

07. பதவியினைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏதேனும் ஒரு விதத்தில் வற்புறுத்தல்களை மேற்கொள்வது பதவியின் பொருட்டான தகுதியற்ற நிலை ஒன்றாக அமையும்.

08. விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்படும் ஏதேனும் ஒரு விடயம் அது தவறானது என ஒருவர் தெரிவு செய்யப்பட முன்னர் தெரிந்துகொள்ளப்பட்டால் தகுதியற்றவர் என பெயரிடவும், நியமனம் செய்ததன் பின்னர் அவ்வாறு வெளிக் கொணரப்பட்டால் பதவியிலிருந்து விலக்கவும் காரணமாக அது அமையும்.

09. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் மொழிகளுக்கிடையே ஏதேனும் ஒரு பொருத்தமற்ற நிலை, அல்லது இசைவின்மை நிலை காணப்பட்டால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள அறிவித்தலுக்கமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

தரணி அனோஜா கமகே,
பணிப்பாளர்,
கலாசார அலுவல்கள் திணைக்களம்.

கலாசார அலுவல்கள் திணைக்களம்,
08 ஆம் மாடி, செத்சிறிபாய,
பத்தரமுல்லை,
2021, ஓகத்து 13.